பதிவு எண். M 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 20 (6—12—71) திங்கள் வெளியூர்: கார்த்திகை 21 (7—12—71) செவ்வாய் [இதழ்: 145

சரணடையும் பாகிஸ்தான் இராணுவம்

கௌரவமாக நடத்த தாக்கிது

புதுடில்லி, டிச. 6—
கடும் சண்டைக்குப் பின்னர் கமல்பூரில் சரணடைந்த பாகிஸ்தான் இராணுவத்தினரை உரிய மரியாதையுடன் நடத்துமாறு நமது படையினரை கேட்டுக் கொண்டு கிழக்குப் பகுதி இராணுவத் தலைமையகத்துக்கு தலைமைத் தளபதி மானெக்ஷா உத்தரவு அனுப்பியிருக்கிறார்.

★ பகைவனின் மண்ணில் பாய்ந்து செல்கின்றனர் இந்திய வீரர்கள் ★

தோல்வியைத் தழுவுகிறது பாகிஸ்தான் — இராணுவத் தலைமை கலகலக்கிறது

முப்படைத் தாக்குதலால் பெருந் திகைப்பு

சரணடையுமாறு இந்தியத் தலைமைத் தளபதி அறிவிப்பு

பகைவனின் டாங்கிகள், விமானங்கள், கப்பல்கள் தூள்பறக்கின்றன — வங்க தேசத்திலுள்ள வெளிநாட்டுக் குடிமக்கள் வெளியேறிவிட வேண்டுமெனக் கோரிக்கை

புதுடில்லி, டிச. 6

இரண்டாவது நாளாக நடைபெற்ற இந்தியா—பாகிஸ்தான் போரில், இந்திய இராணுவம் வியக்கத்தக்க பல சாதனைகளைப் புரிந்திருக்கிறது.

சிந்துப் பகுதியில் புதிய போர்முனையைத் துவங்கி இந்திய இராணுவம் பாகிஸ்தானுக்குள் முன்னேறி 40 மைல் தூரம் சென்றுவிட்டதாகவும், பல முக்கிய நகரங்களைக் கைப்பற்றியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நமது கப்பற்படை, கராச்சித் துறைமுகத்தின் கடற்படைத் தளங்களைத் தாக்கி, பல பாகிஸ்தான் கப்பல்களையும் மூழ்கடித்தன.

இந்திய விமானப் படை எதிரியின் ஏராளமான டாங்கிகளை அழித்திருக்கிறது.

பாகிஸ்தான் விமானங்களுக்கு ஏற்பட்ட சேதம் மிகக் கடுமையானது. இதுவரை 47 பாகிஸ்தான் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

மேற்குப் பகுதியில் பாகிஸ்தான் பல தோல்விகளைத் தழுவிக் கொண்டு வருகிறது.

குறிப்பாக, நமது கப்பற்படையின் சாதனை, பாகிஸ்தான் இராணுவத் தலைமையைக் கலகலக்க வைத்திருக்கிறது.

பாகிஸ்தானின் மூன்று போர்க் கப்பல்களையும் — ஒரு நீர்மூழ்கியையும், இந்தியக் கப்பற்படை மூழ்கடித்தது; சரக்குக் கப்பல் ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டது.

இந்தக் கப்பல்கள் அனைத்தும் கராச்சித் துறைமுகத்திற்கு 20 மைல் தூரத்துக்குள்ளேயே மூழ்கடிக்கப்பட்டன.

கரையிலிருந்து பாகிஸ்தான் தரப்பிலிருந்து கடுமையாகப் பீரங்கிப் பிரயோகம் செய்திருந்தும், இந்தியக் கப்பல்கள் சிறிதுகூட சேதமின்றி, தளத்துக்குத் திரும்பியது ஒரு சாதனையாகும் என்று கருதப்படுகிறது.

இந்தியக் கப்பல்களின் எதிர்பாராத இந்தத் தாக்குதலில் குழப்பமடைந்த பாகிஸ்தான் கப்பற்படைத் தலைமை, செய்வதறியாது திகைத்திருக்கிறது.

இராணுவம் பல முக்கியப் பகுதிகளையும் பிடித்து மேலும் முன்னேறிவருவதைக் கண்ட பாகிஸ்தான் இராணுவத்தினர் பெரும் அளவில் இந்தியத் துருப்புக்களிடம் சரணடைந்து வருகின்றனர்; கிழக்குப் பகுதியில் இதுவரையில் 1,500 பேர் சரணடைந்துவிட்டதாகவும், 1,000 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்திய இராணுவத் தலைமைத் தளபதி மானெக் ஷா, மேலும் இரத்தம் சிந்தாமல் சரணடைந்துவிடுமாறும், சரணடைபவர்கள் அனைத்துலக நியதிப்படி கௌரவமாக நடத்தப்படுவர் என்றும் கூறி ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பாகிஸ்தான் இராணுவத்தினரும், வங்க தேச விடுதலைப் படையினரிடம் சிக்குவதைவிட இந்திய இராணுவத்திடம் சரணடைவதே மேல் என்று கருதுகின்றனராம்.

இந்திய விமானப் படை, எதிரியின் விமானங்களை நாசப்படுத்தி வருவதுடன், அவர்களின் பல விமான நிலையங்களையும், முக்கிய இராணுவப் பகுதிகளையும் சேதப்படுத்தி வருகிறது.

வங்க தேசத்தில் அனேகமாக பாகிஸ்தான் விமானப் படை முற்றிலும் செயலற்றுவிட்டது; இன்னும் அங்கு 4 சாப்ரே ஜெட் விமானங்கள் மட்டுமே இருக்கின்றன; அவற்றையும் அழிக்க இந்திய விமானப் படை சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

பொதுவாகக் கிழக்கு வங்கத்தில், கூடியவரை இரத்தக்களறி ஏற்படாதவாறு இந்திய இராணுவம் எச்சரிக்கையாக நடந்து வருகிறது.

சிட்டகாங்கிலுள்ள வெளிநாட்டுக் கப்பல்கள் எல்லாம் பாதுகாப்பாக வெளியேறுமாறு இந்தியக் கப்பற்படை எச்சரிக்கைவிடுத்துள்ளது.

வங்க தேசத்தில் உள்ள வெளிநாட்டுக் குடிமக்கள் வெளியேறிவிட வேண்டுமென இந்திய இராணுவம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

பதவியை விட்டு ஓட யாகியா கான் முடிவு?

புதுடில்லி, டிச. 6—

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் பூட்டோவும் — ஐக்கியக் கூட்டணிக் கட்சித் தலைவர் நூருல் அமீனும் இராவல்பிண்டியில் நேற்று யாகியா கானைச் சந்தித்துப் பேசியதாகப் பாகிஸ்தான் வானொலி கூறியது; இந்தச் சந்திப்புப்பற்றி மேற்கொண்டு எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்த 4-நாட்களில் இருவரும் அவ்வாறு சேர்ந்து சந்தித்துள்ளது இரண்டாவது தடவையாகும்.

ஆழந் தெரியாமல் காலைவிட்டு, இந்திய இராணுவத்திடம் அகப்பட்டுக்கொண்டு திணறும் யாகியா கான், எந்த நேரத்திலும் ஆட்சியைக் கைவிட்டு ஓட்டம் பிடிக்கத் தயாராகிவிட்டார் என்று கூறப்படுகிறது.

அதற்கு முன் ஆயத்தமே இந்தச் சந்திப்பாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நூருல் அமீன் — பூட்டோ ஆகியவர்களின் கூட்டுத் தலைமையில் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு யாகியா கான் தமது பதவியைத் தலைமுழுகிவிடுவார் என்று தெரிகிறது.

"இந்த நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால் சமாளிக்க முடியுமா?" என்று பூட்டோவும் — நூருல் அமீனும் தயங்குகின்றனராம்

நிலைமை எப்படி இருப்பினும், யாகியா கான் இனி நீண்டநாள் பதவியில் இருக்கமாட்டார் என்பது மட்டும் உறுதியாகிவிட்டது.

தி. மு. க.
தலைமைச் செயற்குழு அவசரக் கூட்டம்

12-12-71 ஞாயிறு அன்று சென்னையில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுவின் அவசரக் கூட்டம், 12—12—71 ஞாயிறு காலை 10-மணிக்கு சென்னை — அண்ணா சாலை சட்டமன்ற தி. மு. க. கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் தலைமையில் நடைபெறும்; அதுபோது, 'பாகிஸ்தான் படையெடுப்பும் நமது கடமையும்' என்ற பொருள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

'அறிவகம்'
சென்னை-18
6-12-1971

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

பட்டியல் இதோ!

நேற்றிரவு கடைசியாகக் கிடைத்த செய்திப்படி, பாகிஸ்தான் 47 விமானங்களையும், 61 டாங்கிகளையும், 3 கப்பல்களையும், ஒரு நீர்மூழ்கிக் கப்பலையும் இழந்துவிட்டிருக்கின்றது.

இந்தியா 17 விமானங்களை இழந்திருப்பதுடன், ஒரு சில டாங்கிகளையும் இழந்திருக்கிறது; இதன் எண்ணிக்கை கிடைக்கவில்லை; கப்பல்கள் எதையும் இழக்கவில்லை என்பதுடன் சிறிதளவு சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வல்லரசுகட்கு இரஷ்யா எச்சரிக்கை

மாஸ்கோ, டிச. 6—

பாகிஸ்தானைக் கடுமையாக எச்சரித்த சோவியத் இரஷ்யா அறிக்கை ஒன்றை வெளியிட்டது; 'இந்தியத் தீபகற்பத்தில் பாகிஸ்தான் தற்போது பின்பற்றி வரும் அபாயகரமான போக்கின் விளைவுகளுக்கு அதுதான் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்' என்று அந்த அறிக்கை கூறுகிறது.

"இரஷ்ய எல்லைகளையொட்டி அதன் பாதுகாப்பு நலன்களைப் பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கையில் இரஷ்யா வாளாவிருக்க முடியாது" என்று அறிக்கை கூறியது.

[எந்த நாட்டையும் பெயர் சொல்லிக் குறிப்பிடாவிட்டாலும், பாகிஸ்தானை ஆதரிப்பதில் அபரிமிதமான ஆர்வம் காட்டும் சீனாவை மனத்திற் கொண்டே அது இவ்வாறு எச்சரித்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.]

கிழக்கு வங்க மக்களின் சட்டபூர்வமான உரிமைகளையும் நலன்களையும் மதித்து ஓர் அரசியல் தீர்வு காணுமாறு அறிக்கை கோரியது.

அரசியல் தீர்வுக்கான அடிப்படையை இந்த அறிக்கை குறிப்பிடவில்லை; ஆனால் சோவியத் தலைமையமைச்சர் கோசிஜின் டென்மார்க்கில் அளித்த டெலிவிஷன் பேட்டியில், 'முஜிபுர் ரகிமானை விடுவிக்க வேண்டும்' என்றும், வங்க தேசத்தில் 'கடந்த டிசம்பரில் நடந்த தேர்தல் முடிவை மதித்து நடக்கவேண்டும்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"அடக்குமுறைகளுக்கும் — அட்டூழியங்களுக்கும் கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் எதிர்ப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

‘மத வெறி’ யூட்டிய மதோன்மத்தர்கள் மறைந்தொழிவது உறுதி

[✶]

இனப் படுகொலை செய்தவர்கள் இனி தப்பிப்பதற்கு இடமில்லை

மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின் மூலவர்களின் நாட்குறிப்பேடு நாளும் கிழிக்கப்படுகிறது -- மேற்கு வங்காளம் தனி நாடாவது உறுதி -- மக்களின் இலட்சியம் நிறைவேறும் நாள் நெருங்குகிறது

போர் வெறிகொண்ட மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியினர், இந்தியாவுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்துவிட்டனர்.

1947-ம் ஆண்டில் தாக்குதல் நடத்தியதுபோல் — 1965-ஆம் ஆண்டில் ஆக்கிரமிப்புச் செய்ததுபோல் — மூன்றுவது தடவையாக இப்போது பாகிஸ்தான் இந்தியா மீது திடீரென ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறது — முழு அளவில் போரைத் தொடங்கியிருக்கிறது.

பாகிஸ்தான் தோன்றிய நாள் முதற்கொண்டே அதன் கொள்கை -- நடைமுறைகளை உருவாக்குவதில் அந்நாட்டு மக்களுக்குப் பங்கு இல்லாமலே இருந்துவந்திருக்கிறது; இப்பொழுது போர் தொடுத்திருப்பவர்கள் மேற்குப் பாகிஸ்தான் இராணுவத் தலைமையினரேயாவர்; மேற்குப் பாகிஸ்தான் மக்களுக்கும் — இந்திய மக்களுக்கும் விரோதம் ஏதும் இல்லை; ஆனால், மேற்குப் பாகிஸ்தானை ஆளும் இராணுவ வெறியர்கள் மேற்கொண்டிருக்கின்ற ஆக்கிரமிப்புக்கு எதிராக நின்று போரிட்டு வெற்றி காண்பதற்கு இந்தியா உறுதி கொண்டுவிட்டது!

வங்க தேசத்தில் நடைபெற்ற இனப் படுகொலையைக் கண்டு உலக நாடுகள் செயலற்று இருந்ததன் விளைவே, பாகிஸ்தானின் துணிகரமிக்க இந்த ஆக்கிரமிப்புக்குக் காரணமாகும் என்பதை யாரும் மறுப்பதற்குமில்லை — மறைப்பதற்குமில்லை!

முன்னைய இரு ஆக்கிரமிப்புகளின்போது மேற்குப் பாகிஸ்தான், போர்ப் பிரகடனம் ஏதும் செய்யவில்லை; ஆனால் இம்முறை செய்திருக்கிறது; எனினும், இதில் ஒரு தனி முறையைக் கையாண்டிருக்கிறது — அது என்ன?

போர்ப் பிரகடனம் செய்துவிட்டுப் பின்னர்தான் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது முறை; இத்துறையில் பாகிஸ்தான் தலைகீழாக நடந்துகொண்டிருக்கிறது; கடந்த வெள்ளிக்கிழமையன்று வானிலும் — தரையிலும் தாக்குதல்களைத் தொடங்கிவிட்டு -- சனிக்கிழமையன்று காலை போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது.

போரைத் தவிர்ப்பதற்கே இறுதி வரையில் இந்தியா விரும்பியது; ஆனால், போர் திணிக்கப்பட்டுவிட்ட நிலையில், முழு மூச்சுடன் முன்னேறி வெற்றியை ஈட்டுவதுதான் — உறுதிப்படுத்துவதுதான் அதன் கடமையாகிவிட்டது; தன்னுடைய வீரத்தையும் மானத்தையும் நிலைநாட்டிட வேண்டிய கட்டம் பிறந்துவிட்டது!

மேற்குப் பாகிஸ்தான் எதேச்சாதிகாரிகள், கிழக்கு வங்கம் தங்கள் கையைவிட்டுப் போய்விடுவது நிச்சயம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டதைக் கண்டதும் நிலை தடுமாறி பெரும் போரில் இறங்கியிருக்கின்றனர்.

முன்பு நடைபெற்ற போர்கள், எல்லைப் பகுதிகளிலேயே நடைபெற்றன; இந்தத் தடவை, தொலைதூரம் உள்ளே சென்று நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்பது தெளிவாகிவிட்டது; அதுபோன்று தாக்கும்படியான கட்டளையை மேற்குப்பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் தனது படையினருக்கு பிறப்பித்திருப்பதால் நமது போர் வீரர்களும் அதே முறையைக் கையாளுவது தவிர்க்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

நாட்டின் வளத்தையெல்லாம் இராணுவத் துறையிலேயே ஈடுபடுத்தி — மத வெறியை யூட்டி — மக்களை ‘மாக்’களாக மதித்துவந்த மேற்குப் பாகிஸ்தான் இராணுவக் கொடுங்கோலர்கள், தாங்கள் வகுத்துவிட்ட போர்ப் பாதையிலிருந்து தப்பித்துவிட முடியாது; உரிய தீர்ப்பு அவர்களுக்குக் கிடைத்துத்தான் தீரும்! இந்த இராணுவ ஆட்சியினரின் நாட்குறிப்புகள் — நாளும் கிழிக்கப்பட்டு வருகிறது!

இந்தப் போரின் இறுதியில், மேற்குப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பிலிருந்து கிழக்கு வங்கம் விடுதலை பெறும் -- தனி நாடாக இயங்கும்; அந்நாட்டு மக்களின் விடுதலை இலட்சியம் கைகூடும்!

யாகியாவின் வகுப்புவாதக் குரல்

பாகிஸ்தானைப் போன்று இந்தியா போர்ப் பிரகடனம் செய்யவில்லை; காரணம், ‘இந்தியா -- போர் வெறி கொண்ட நாடு அல்ல’ என்பதுதான்; ஆனால், ஐ. நா. சாசனப்படி, தற்காப்பு உரிமையை இந்தியா முழு அளவில் செயல்படுத்தும்.

இப்போதைய படையெடுப்புக்குப் பாகிஸ்தான் இரண்டு மாத காலமாகவே ஏற்பாடு செய்துவந்திருக்கிறது; கடந்த அக்டோபர் 5-ந் தேதி முதலே பாகிஸ்தான் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன; ‘போர் மூளும் நிலை உருவாகியிருக்கிறது’ என்று அக்டோபர் 12-ந்தேதியன்று பாகிஸ்தான் அதிபர் யாகியாகான் அறிவித்தார்.

போர்ப் பிரகடனம் செய்த சில மணி நேரத்திற்குப் பிறகு ஜெனரல் யாகியா கான் வானொலியில் பேசுகையில் -- அவருடைய குரலில் போர் வெறி தொனித்தது; எப்போதும் ஆங்கிலத்திலேயே பேசும் அவர், உருது மொழியில் உரையாற்றத் தொடங்கினர்; அந்த உரையில் வகுப்புவாத வெறி மேலோங்கி நின்றது! ‘பாகிஸ்தானின் 12 கோடி மக்களும் போர் உணர்வுடன் ஆர்த்தெழுந்து ‘எதிரியை அழிக்க முனைய வேண்டும்’ என்று குரல் எழுப்பினர்.

பல முறை அவர், ‘அல்லா’ என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே, ‘பாகிஸ்தானைப் பலவீனப்படுத்த இந்தியா திட்டமிட்டிருக்கிறது; அவர்களுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டும்’ என்றார்.

“இந்தியாவுடன் இப்போது நடைபெறும் போரே இறுதியானதாகும்; நமக்கு உதவி செய்ய உலகிலுள்ள நம்முடைய நண்பர்களெல்லாம் உதவிக்கு வருவார்கள்” என்று பெருமிதப்புடன் கூறினர்.

“பாகிஸ்தான் ‘எதிரி’யின் சவாலை கருங்கற் பாறைபோல் எதிர்த்து நிற்கும்” என்று திமிர்வாதம் பேசினர்.

“பாகிஸ்தான் இராணுவம், ‘எதிரி’ படைகளை அதன் எல்லையிலிருந்து விரட்டியடிப்பது மட்டுமல்ல -- அதனுடைய சொந்த மண்ணிலேயே அவர்களை நிர்மூலமாக்கும்” என்று ‘வீரம்’ பேசினர்.

அதே நேரத்தில் அவர், ‘இஸ்லாம்’ உயர்ந்த கோட்பாடுகளை உச்சரிக்கவும் முனைந்தார்.

மக்கள் இனத்தையே அழிக்க முனையும் கொடுங்கோலர்கள் -- இந்திரா தாக்கு

மேற்குப் பாகிஸ்தானின் போர்ப் பிரகடனத்தை மக்களவையில் அறிவித்துத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“இந்திய மக்களும் — பாகிஸ்தான் மக்களும் போரில் ஈடுபடுத்தப்பட்டது வேதனைக்குரியதாகும்; நல்லுறவுடன்கூடிய அண்டை நாடுகளாக நாம் வாழ்ந்திருக்க முடியும்; ஆனால், மேற்குப் பாகிஸ்தான் மக்களுக்குத் தங்களது கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பே கிடைக்கவில்லை; இந்நெருக்கடியான கட்டத்தில், நம்பிக்கையே நமது மூச்சாக இருக்கிறது!

கடந்த 9 மாதங்களாக மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சி, வங்க தேசத்தில் சுதந்தரத்தையும் -- அடிப்படை உரிமைகளையும் மிருகத்தனமாக நசுக்கிவருகிறது; அங்குள்ள ஆக்கிரமிப்பு இராணுவம், மிகக் கோரமான கொலைகளை நிகழ்த்தியுள்ளது; பல இலட்சக்கணக்கான மக்கள் குடிபெயர்ந்துள்ளனர்; ஒரு கோடி பேர் நம் நாட்டுக்குள் துரத்தப்பட்டிருக்கின்றனர்.

மக்கள் இனமே அழிக்கப்படும் செயலையும், இதனால் நமது பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தையும் உலகத்தின் கவனத்துக்குப் பல தடவை கொண்டுவந்தோம்; இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தையும், பொருளாதாரம் மற்ற சுமைகளையும் புரிந்துகொண்டு ஒவ்வொரு நாட்டு மக்களும் அனுதாபம் காட்டினர்; ஆனால், அந்நாடுகளின் அரசுகள் நிரந்தரத் தீர்வுக்கான நடவடிக்கையை எடுக்குமாறு இசுலாமாபாத்தைத் தூண்டும் முயற்சியில் காலங்கடந்து ஈடுபட்டன; ஆனால், பாகிஸ்தானைப் பொறுத்தவரையில், அது செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று!

வங்காள தேச மக்கள் உறுதியுடன் -- உயரிய இலட்சியங்களுக்காகப் போராடுகின்றனர்; அதனைச் சமாளிக்க முடியவில்லை; எனவே, மேற்குப் பாகிஸ்தான் இராணுவத்துக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது; மக்கள் உணர்ச்சி பாகிஸ்தானில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒடுக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் படையின் தாக்குதல் வலுத்ததால், மேற்குப் பாகிஸ்தான் இராணுவம் அதிக அளவுக்கு ஆத்திரம் அடைந்துள்ளது; ஒடுக்கப்பட்டவர்கட்கு ஆதரவாக நிற்பதே நமது பண்பாடு; கொடுங்கோலர்கட்கு ஆதரவு தருவது நமது வழக்கம் அல்ல; எனவே, நம்மீது மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் சீற்றமடைந்திருக்கின்றனர்; வங்காள தேசத்தின் மீதுள்ள ஆக்கிரமிப்பை இந்தியாவுடன் முழு அளவு போராக முற்ற வைத்துவிட்டது.

சமாதானத்துக்குத் தேவைப்படுவதைப் போன்று போருக்கும் பொறுமையும், சகிப்புத் தன்மையும் தேவை; வகுப்புவாத நெருக்கடியையும் -- உள்நாட்டுத் தகராறையும் தூண்டிவிடும் எண்ணத்தில் மேற்குப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் பித்தலாட்டப் பிரசாரத்தில் ஈடுபடுவர்; நாம் அவர்களது தந்திர வலையில் சிக்கிவிடக்கூடாது; ஒற்றுமையையும் உயரிய இலட்சிய உணர்ச்சியையும் நாம் பேணிக்காக்க வேண்டும்.”

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் -- நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

புதுடில்லி, டிச. 6—

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை மக்களவையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், மாநிலங்களவையில் பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராமும் தாக்கல் செய்தனர்.

இச்சட்டத்தின்மீது எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேசினர்கள்; உடனடியாகச் சட்டத்தை நிறைவேற்ற அனைத்துக் கட்சியினரும் ஆதரவு தெரிவித்தனர்; இரு அவைகளிலும் இச்சட்டம் ஒருமனதாக நிறைவேறியது; இதனையடுத்துக் குடியரசுத் தலைவர் இச்சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார்.

அரசுக்குத் தனி அதிகாரங்கள்

அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதையொட்டிப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அவசர நிலை நடைமுறையில் இருக்கும் வரையில் பாதுகாப்புச் சட்டமும் இருக்கும்; அதற்குப் பிறகும் 6-மாதம் நடைமுறையில் வைத்திருக்கலாம்.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் குறைந்தபட்சமான குறுக்கீடுகளுக்கே சட்டம் வழிசெய்கிறது.

முந்திய சட்டத்தையே இப்போதைய சட்டமும் பின்பற்றியிருக்கிறது; ஆனால், அனுபவத்தையொட்டி சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் துரிதமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இப்போதைய சட்டம் வழிகோலுகிறது. பாதகமான நடவடிக்கைகள்மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்; அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் காவலில் வைக்க மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது; ஆலோசனை போர்டைக் கலந்துகொள்ளாமலேயே இரண்டு வாரம் காவலில் வைக்கலாம்.

40 பிரிவுகள் விவரம்

பொது நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு அவசரகால அதிகாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன; சட்டத்தில் 40 பிரிவுகள் இருக்கின்றன.

பகைவனுக்கு உதவுவோருக்கு மரண தண்டனை -- ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

இந்தியாவுக்கு வெளியேயுள்ள இந்தியர்களையும் பாதுகாப்புச் சட்டம் கட்டுப்படுத்தும்; இந்தியாவின் முப்படையினருக்கும், இந்தியாவில் பதிவான கப்பல்களுக்கும், விமானங்களுக்கும் விதிகள் பொருந்தும்.

நாட்டுப் பாதுகாப்பு -- சிவில் பாதுகாப்பு -- பொதுமக்கள் பாதுகாப்பு -- அமைதி காப்பு -- இராணுவ நடவடிக்கைகளின் திறமையை உறுதி செய்வது -- இன்றியமையா சப்ளைகளை உறுதி செய்வது போன்ற பணிகளுக்கான விதிகளை அரசு இதழில் வெளியிட்டுச் செயல்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

உளவாளிகள் மீதான நடவடிக்கைகளுக்கும் இது வழி செய்யும்.

பகைவர்களுக்கும் பயன்படக்கூடியவை -- நாட்டு நலனுக்கும் பாதகமானவை போன்ற செய்திகளை வெளியிடுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்; அச்சகங்களும் பறிமுதலாகலாம்.

துறைமுகங்கள், தந்தி சாதனங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு-- சொத்துகளைக் கையகப்படுத்துவது -- கோரிப் பெறுவது ஆகியவற்றுக்கும் வழி செய்யலாம்.

உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மூன்று மாதங்களுக்கு மேலும் காவலில் வைக்கலாம்; அதிகபட்சம் இது இரண்டாண்டாக இருக்கும்.

தொழில் நுட்பத் திறனாளரின் சேவையை நாட்டுப் பாதுகாப்புப் பணிகளுக்காகக் கோரிப் பெற அரசுக்கு 14-வது பிரிவு அதிகாரம் அளிக்கிறது; அம்மாதிரி பணிகளுக்கு அழைக்கப்படுபவர்கள், பிறகு தமது பழைய ஊழியத்தில் அமர்த்தப்பட உரிமையுள்ளவர்களாக இருப்பர்.

கோரிப் பெறும் உரிமைகட்கு நட்டஈடு கிடைக்கும்

கோரிப் பெறும் உடைமைகட்கு உரிய வாடகை -- நட்டஈடு ஆகியவை கிடைப்பதற்கு வழி செய்யப்படுகிறது.

இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தி நடமாட்டம்--விலைமீது கட்டுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

‘நம்முடைய தியாகத்தில்தான் நாட்டின் பலம் இருக்கிறது’

மக்களுக்குத் தலைமையமைச்சர் வேண்டுகோள்

“நீண்டகாலப் போராட்டத்துக்கு நாம் தயாராக இருக்கவேண்டும்; வேளாண்மைத் துறை -- தொழில் துறைகளில் உற்பத்தி பெருகவேண்டும்; இதன் அடிப்படையில்தான் பாதுகாப்புப் பணி உள்ளது; போர் வீரர்களின் துணிவுக்கும் -- போர்த் திறனுக்கும் பக்கபலமாக விவசாயிகளும் -- தொழிலாளர்களும் -- தொழில் நிபுணர்களும் -- வியாபாரிகளும் பாடுபடவேண்டும்.

“வர்த்தகச் சமூகத்தினருக்குத் தனிப் பொறுப்பு உள்ளது; கொள்ளை இலாபத்துக்கு விற்கும் அல்லது பதுக்கும் மனப்பான்மைக்கு அவர்கள் இடமளிக்கக்கூடாது.

“கலைஞர்கள் -- எழுத்தாளர்கள் -- ஆசிரியர்கள் -- மாணவர்கள் ஆகியோரும் உறுதியுடன் நமது இலட்சியங்களைப் பாதுகாக்க வேண்டும்.

“பெண்களுக்குத் தனி வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்; ஒவ்வொரு தானியத்தையும் -- ஒவ்வொரு காசையும் விரயமாக்காமல் அவர்கள் சேமிக்கவேண்டும்; நம் ஒவ்வொருவருடைய தியாகமும் நாட்டின் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்தும்.

“நாம் சமாதானத்தை விரும்புவர்கள்; நமது ஒருமைப்பாட்டையும் -- கண்ணியத்தையும் காக்கப் போரிடுகிறோம்! எல்லாவற்றுக்கும் மேலாக மனிதச் சுதந்தரத்துக்காகப் போரிடுகிறோம்!”

—மக்களவையில் ஆற்றிய உரையில்

இந்தியாவின் முப்படை முதல் தடவையாக போரில் இறங்கின

பாகிஸ்தானின் போர்ப் பிரகடனத்தையடுத்து இந்தியாவின் முப்படைகளும்--தரைப் படை, விமானப் படை, கப்பற்படை போரில் இறங்கின; இந்தியா சுதந்தரம் பெற்றபிறகு முப்படைகளும் போரில் இறங்குவது இதுவே முதல் தடவையாகும்.

சுமார் 2,500 மைல் நீளமுள்ள இந்தியா -- பாகிஸ்தான் எல்லையில் பல போர் முனைகள் உருவாகியிருக்கின்றன; இந்த முனைகள்-- மேற்கும் பாகிஸ்தான் எல்லையோரமாகக் காஷ்மீரில் பாகிஸ்தானிடமுள்ள பகுதி, மேற்கு பஞ்சாப், சிந்து, கிழக்கு பஞ்சாப், இராஜஸ்தான், கிழக்கு வங்காளத்தைச் சுற்றியுள்ள மேற்கு வங்கம், அசாம், திரிபுரா ஆகியவைகளாகும்.

இந்த 2,500 நீளமுள்ள எல்லையில்தான் தாக்குதல்களும் -- தற்காப்புப் போரும் நடைபெற்று வருகின்றன.

இந்தியப் போர்க் கப்பல்கள் சாதனை

பாகிஸ்தானின் போர்க் கப்பல்களைத் தேடிக் கண்டுபிடித்து--- அவற்றை மூழ்கடிக்குமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

வங்காள தேசத்திலுள்ள பாகிஸ்தான் இராணுவத்துக்குக் கப்பல்கள்மூலம் எந்த உதவியும் போய்ச் சேரக்கூடாது என்பதற்காகவே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

போர் மூண்டதிலிருந்து இந்தியக் கடற்படையின் மேற்குப் பிரிவு அரபுக் கடலிலும், கிழக்குப் பிரிவு வங்காளக் குடாக்கடலிலும், போர்த் தாக்குதலில் ஈடுபட்டிருக்கின்றன.

இந்தியா சுதந்தரமடைந்ததிலிருந்து நடைபெற்றுள்ள போர்களில் இந்தியக் கடற்படைக்குத் தனது திறனைக் காட்டுவதற்கு வாய்ப்பே ஏற்படவில்லை; இப்போதைய போரில்தான் முழு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

மேற்குப் பிரிவைச் சேர்ந்த இந்தியப் போர்க் கப்பல்கள் -- விமானங்கள் கராச்சித் துறைமுகத்தில் அமைந்துள்ள இராணுவத் தளங்களைக் குண்டுவீசித் தாக்கின; பாகிஸ்தானின் மூன்று போர்க் கப்பல்கள் குண்டுகளால் துளைக்கப்பட்டுக் கடலில் மூழ்கிவிட்டன; மற்றொரு கப்பலுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டது.

வங்கக் கடலில் செயல்படும் இந்தியப் போர்க் கப்பல்கள், பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றைத் தாக்கின; நீருக்குள் மறைந்து வந்த அந்த நீர்மூழ்கிக் கப்பலைக் கட்டாயமாக நீருக்கு மேலே வரும்படி உத்தரவிடப்பட்டது; அப்போது இந்தியப் போர்க் கப்பல்கள் அதனைத் தாக்கின; குண்டுகளால் துளைக்கப்பட்ட அது நீருக்குள் மூழ்கியது; அதன்பிறகு அது வெளியேவரவேயில்லை.

கிழக்கு -- மேற்குப் போர் முனைகளில் தரைப் படையினர் முன்னேற்றம்

கிழக்குப் போர் முனையில் -- வங்காள தேசத்திற்குள் இந்திய இராணுவத்தினர் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றனர்; முக்கிய நகரங்களைக் கைப்பற்றுகின்றனர்; பல முனைத் தாக்குதல்கள் நடத்துவதால், பாகிஸ்தான் படையினர் திக்குமுக்காடுகின்றனர்; பல இடங்களில் சரணடைந்துவிட்டனர்.

மேற்குப் பாகிஸ்தானிலும் இந்திய இராணுவம் 35 மைல் தூரம் முன்னேறியிருக்கிறது; பல நகரங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

இந்திய இராணுவ வீரர்களின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் இராணுவம் பின்வாங்கிக்கொண்டிருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தின் எல்லையோரத்திலிருந்து லாகூர் நகரம் நோக்கியும் இந்திய இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்கிறது.

அமிருதசரஸ் -- லாகூர் சாலையில் இரண்டு முக்கிய இடங்களை இந்திய இராணுவம் கைப்பற்றியது.

விமானப் படையின் சாதனை

இந்தியப் போர் விமானங்கள் தொடர்ந்து மேற்குப் பாகிஸ்தானின் முக்கிய நகரங்கள்மீது குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது; பல விமானத் தளங்களையும் -- இராணுவ முகாம்களையும் தொடர்ந்து தாக்கின; 10 டாங்கிகள் தீப்பிடித்து எரிந்தன.

கிழக்குப் பாகிஸ்தானில் சிட்டகாங் துறைமுகத்தின்மீது இந்திய விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

வங்க தேசத்தில் நேற்றும் இன்றும் இந்திய விமானங்கள் 5 பாகிஸ்தான் டாங்கிகளை அழித்தன; 3 பீரங்கிகளை வாயடைக்க வைத்தன; 12 சரக்கு இரயில்கள்மீது குண்டுகளை வீசின; 42 பதுங்கு குழிகளைத் தகர்த்தன.

2 தண்ணீர்த் தொட்டிகளையும் -- இராணுவப் பாசறைகள் பலவற்றையும் சீரழித்தன; மின்விசை நிலையங்களை முடமாக்கின.

3 கப்பல்களை நாசம் செய்தன; 100 இராணுவ டிரக்குகளை நொறுக்கின; ஜோக்ரா பகுதியில் 3 பெட்ரோல் பங்குகளைப் பொசுக்கின.

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு : நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம். சென்னை-6.

நாடு காக்க எத்தகைய தியாகத்துக்கும் தயார்

★

இரத்தத்தில் கையெழுத்திட்டனர் தமிழக அமைச்சர்கள்

தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய இந்திரா காந்தி பிறந்த நாள் விழா நிகழ்ச்சி

சென்னை, டிச. 2—

“நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில் நாட்டைக் காக்க எத்தகைய தியாகத்துக்கும் தயார்” என்று இரத்தத்தில் எழுதப்பட்ட உறுதி மொழிப் பத்திரத்தில் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா முன்னிலையில் 150 பேர் தத்தம் இரத்தத்தில் கையெழுத்திட்டனர்.

அமைச்சர்கள் கே. இராசாராம், அன்பில் தர்மலிங்கம், மேயர் திருமதி காமாட்சி செயராமன் ஆகியோரும் இரத்தத்தில் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ் எழுத்தாளர் சங்கச் சார்பில் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியின் பிறந்த நாள் விழா, நேற்று எட்வர்டு எலியட்ஸ் சாலை இராஜேசுவரி திருமண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. கோ. பன்னீர் செல்வம் தலைமையில் நடந்த இந்த விழாவை ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் துவக்கிவைத்து உரையாற்றினர்.

திருமதி இந்திரா காந்தி உருவப் படத்தைத் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. பி. சி. வீரபாகு திறந்து வைத்தார்.

இந்திரா காந்தியின் அறிவு-- ஆற்றல் -- ஏழையை வாழவைக்கும் இலட்சியம் -- இராச தந்திரம் ஆகியவைகளைப் பாராட்டி வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. என். டி. சுந்தரவடிவேலு, மேயர் திருமதி காமாட்சி செயராமன், திரு. முருகமலை, கொடுமுடி கிருட்டிணன் ஆகியோர் உரையாற்றினர்.

திருமதி வாலம் அம்மையார், செல்விகள் எஸ். பி. சற்குணம், கே. பாக்கியலட்சுமி, எஸ். ரேவதி, ஆர். இராசலட்சுமி, கே. பி. கே பிரேமா, ஆகியோர் இந்திரா காந்திக்கு வாழ்த்துப் பாமாலை சூட்டினர்.

துவக்கத்தில், எழுத்தாளர் சங்க பொதுச்செயலாளர் கவிஞர் வா. மு. சேதுராமன் தமது வரவேற்புரையை, கவிதை வடிவில் ஆற்றினர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ஆயுள் உறுப்பினராகப் பதிவு செய்துகொண்டவர்கட்கு ஆளுநர் திரு. கே. கே. ஷா தமிழில் கையொப்பமிட்டு நற்சான்றிதழ்கள் வழங்கினர்.

துணைவேந்தர் சுந்தரவடிவேலு, ஏ. பி. சி. வீரபாகு, முன்னாள் மேயர் சா. கணேசன், நடிகர் டி. என். சிவதாணு, திருமதி இராசம், இராமசாமி, வானதி பதிப்பக உரிமையாளர் திருநாவுக்கரசு, வாலம் அம்மையார் ஆகியோர் ஆயுள் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டார்கள்.

உறுதிமொழிப் பத்திரத்தில் முதலில் எழுத்தாளர் சங்கச் சார்பில் கோ. பன்னீர் செல்வம் இரத்தத்தில் கையெழுத்திட்டார்; அவரைத் தொடர்ந்து பலரும் ‘கியூ’வில் நின்று கையெழுத்திட்டனர்.

பத்திரிகையாளர்கள் சார்பில் மா. செங்குட்டுவன் (‘நம் நாடு’) கையெழுத்திட்டார்; எஞ்சினியர்கள் சார்பில் ஜி. கலியபெருமாள், மாஜிஸ்திரேட்டுகள் சார்பில் இரா. முருகமலை, நாடோடிகள் சார்பில் முனியம்மா, மணியாட்டிகள் சங்கத் தலைவர் வி. பொம்மன், குடுகுடுப்பைக்காரர்கள் சார்பில் ஏழுமலை ராவ் முதலியோர் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த இரத்தக் கையெழுத்து உறுதிமொழிப் பத்திரத்தைத் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அனுப்பிவைக்கும் பொருட்டு ஆளுநரிடம் அளிக்கப்பட்டது.

சட்டமன்ற உறுப்பினர்கட்கு வீடு

சட்டப் பேரவையில் கோரிக்கை-நாவலர் பதில்

சென்னை, டிச. 4—

“சட்டமன்ற உறுப்பினர்களுக்கென சென்னை அரசினர் தோட்டத்தில் வீடுகள் கட்டப்படுமா?”

என்ற கேள்விக்கு, ‘இல்லை’ என்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டப் பேரவையில் பதிலளித்தார்.

மேலும் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

“இப்போது சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ள 18 பேருக்கு அரசு வீடுகள் ஒதுக்கியுள்ளது; மேற்கொண்டு வீடு கட்டித் தருவதற்கான திட்டம் ஏதும் இல்லை; அதற்கு நிதி நிலையும் சரியில்லை; சிறு குடில்கள் (காட்டேஜ்) அமைக்கலாம் என்ற யோசனையும் தற்போது இல்லை.”

சேலம் உருக்காலை

ஓர் ஆண்டில் நிர்மாண வேலை துவங்கும்

புதுடில்லி, டிச. 3—

“சேலம் உருக்காலைத் திட்டம் தாமதப்படுத்தப்படுகிறது என்று அஞ்சத் தேவையில்லை”

என்று, உருக்கு -- சுரங்க அமைச்சர் மோகன் குமாரமங்கலம், மக்களவையில் கூறினர்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

“ஆலை நிர்மாணவேலை எப்போது துவங்கும் என்பதற்கான தேதியைத் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும், ஆரம்ப வேலை துரிதமாக நடந்து வருகிறது.

“நிலத்தை வாங்குவது போன்ற காரியங்களுக்காக ஏற்கனவே சுமார் ரூ. 75 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது; சுமார் ஓராண்டுக் காலத்தில் ஆலை நிர்மாண வேலையைத் துவங்க இயலும் என நம்புகிறேன்.”

முட்டைப் பொடித் தொழிற்சாலை

சென்னை, டிச. 4—

“முட்டைப் பொடி தயார் செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை”

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்; இதுபற்றி மேலும் அவர் கூறியதாவது:—

“நமது நாட்டில் இப்போது 35 கோடி முட்டைகள்தான் உற்பத்தியாகின்றன; தலைக்கு அரை முட்டை தேவை என்றால் கூட, 75 கோடி முட்டைகள் நாள் ஒன்றுக்கு தேவைப்படும்; எனவே, போதிய அளவு முட்டை உற்பத்தியாகின்ற நிலை ஏற்பட்டபின் முட்டைப் பொடி தயாரிப்பது பற்றி யோசிக்கலாம்.”

'ஒன்றுபட்டு நிற்போம்'

'எதிரியை முறியடிக்கச் சூளுரை ஏற்போம்'

சென்னைக் கூட்டத்தில் கலைஞர் வீரமுழக்கம்

சென்னை, டிச. 6—

"10 கோடி பேருள்ள பாகிஸ்தான், 55 கோடிப் பேருள்ள இந்தியாமீது படையெடுத்திருக்கிறது என்றால், எந்தத் தைரியத்தினால் ;-- எந்தப் பலத்தை நம்பி ? ஆயுத பலத்தை நம்பியா ? மக்கள் பலத்தை நம்பியா ? -- நிச்சயமாக இல்லை ; 'ஆளுக்கோர் ஆள் என்று மடிந்தாலும் 45 கோடி மக்கள் இந்தியாவில் மிஞ்சுவார்கள்' என்று அவர்களுக்குத் தெரியும் ; இருப்பினும் அவர்கள் படையெடுத்திருக்கிறார்கள் ; 'இந்தியாவிலுள்ள நாம் ஒன்றாக இல்லை -- ஒற்றுமையாக இல்லை -- சாதி, சமய, கட்சிப் பூசல்கள் தலையெடுத்திருக்கின்றன' என்ற நினைப்பில் படையெடுத்திருக்கிறார்கள் !

"அவர்களுக்குச் சொல்லிக்கொள்வோம் -- கடந்த உலகப் போரில் இங்கிலாந்து நாட்டுத் தலைமையமைச்சர் சர்ச்சில் இரண்டு விரல்களை 'V' என்பது போல் காட்டி, 'வெற்றி நமதே' என்று கூறினார்.

"ஆனால், இன்று சிலையாக நிற்கும் அண்ணா அவர்கள், ஒரு விரலைக் காட்டுகிறார்கள் ; அதன் பொருள் -- 'நெருக்கடி நேரத்தில் பொதுவான காரணங்களுக்காக நாங்கள் ஒன்றுபடுவோம்' என்பதுதான் !

"இனி நம்மிடையே எந்தவிதமான வேறுபாடும் இல்லை ; தி.மு.க. என்றோ -- காங்கிரசுக் கட்சி என்றோ -- முஸ்லிம் லீக் என்றோ -- கம்யூனிஸ்டுக் கட்சி என்றோ -- தமிழரசுக் கழகம் என்றோ -- சுதந்தராக் கட்சி என்றோ -- சோஷலிஸ்டுக் கட்சி என்றோ வேறுபாடு இல்லை ; நாம் அனைவரும், 'இந்தியாவின் கட்சி' என்ற அளவில் ஒன்றுபட்டிருக்கிறோம் -- என்பதைப் பகைவர்களுக்கு உணர்த்துவோம் !"

—என்று, தமிழக முதல்வரும் கழகத் தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள், நேற்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அமெரிக்கச் சுற்றுப்பயணம் முடித்துவிட்டுத் தாயகம் திரும்பிய முதலமைச்சர் கலைஞர் அவர்கட்கு வரவேற்பு அளிக்கும் பொருட்டும்-- பாகிஸ்தான் போர் வெறிக்குக் கண்டனம் தெரிவிக்கும் விதத்திலும் கலைவாணர் அரங்கத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் தலைமை தாங்கினார்.

சென்னை மாநகராட்சித் துணை மேயர் என். வி. என். சோமு, மேயர் திருமதி காமாட்சி செயராமன், பார்வர்டு பிளாக் தலைவர் ஏ. ஆர். பெருமாள், முஸ்லிம் லீக் தலைவர் திருப்பூர் மொய்தீன், புதுவை முதலமைச்சர் எம். ஓ. எச். பாருக், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், ஏ. கே. சுப்பையா, (வலது கம்.) செயராம ரெட்டியார் (இ. காங்கிரசு), கழகப் பொருளாளர் -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., 'விடுதலை வீரமணி, முரசொலி மாறன், பொதுச்செயலாளர் நாவலர், தந்தை பெரியார் ஆகியோர் பேசியபின் கலைஞர் உரையாற்றினார் ; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"யாகியா கான், 'இது கடைசிப் போர்' என்று சொன்னாராம் ; அவருக்கு அவரைப் பற்றி அவ்வளவு தெளிவாகத் தெரிந்திருப்பதற்காக நாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

யாகியா கானுக்கே தெரிகிறது-- 'இது கடைசிப் போர்' என்று!

முழு மூச்சோடு இந்தியா இந்தப் போரிலே ஈடுபட்டு, உண்டு -- இல்லை ; 'வாழ்வா -- சாவா ?' என்று பார்த்து வரவேண்டிய கட்டத்தில் இனிமேல் பாகிஸ்தான் இந்தியாவின் பக்கம் கால்வைக்கக்கூடாது; பாகிஸ்தான் பெறும் பாடம், பக்கத்திலே இருக்கின்ற மற்ற நாடுகளுக்கும் ஒரு போதனையாக அமைய வேண்டும் -- என்ற வகையில் இந்தத் தடவை நாம் கொடுக்கின்ற அடி, அதன் இடுப்பை ஒடிக்கின்ற அடியாக இருக்கவேண்டும்.

அதற்கேற்ற வகையில், இந்தியாவின் வலிமையை ஒன்றுபடுத்தி உருக்வாக்க -- தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் கரத்தை வலுப்படுத்த, 'தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் போருக்கு இளைத்தவர்கள் அல்லர்' என்பதை நிலைநாட்ட அனைவரும் ஓரணியில் திரள வேண்டும்.

இந்தப் போராட்ட நேரத்தில், வெளியிலிருந்து வருகின்ற பகைவர்களைவிட உள்ளே உள்ளே இருக்கின்ற பகைவர்கள் ஆபத்தானவர்கள் ; அந்தப் பகைவரிடமிருந்தும் நாட்டைக்காப் பாற்றவேண்டும்.

நமது சிலம்புச் செல்வர் குறிப்பிட்டார் -- ஒரு பருக்கையைக் கூட வீணாக்கக் கூடாது' என்று ; அதற்குப் பொருள், 'ஒரு பருக்கையைக்கூட வீணாக்காமல் நாமே சாப்பிடுவது' என்று அர்த்தமல்ல ; 'ஒரு பருக்கையைக்கூட வீணாக்காமல் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்து நாட்டைக் காத்திட வேண்டும் -- நாட்டிற்காகக் கடமையாற்ற வேண்டும்' என்பதுதான்."

தாயகம் திரும்பிய கலைஞருக்கு

மகத்தான வரவேற்பு

சென்னை, டிச. 6-

அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று சென்னை திரும்பிய கழகத் தலைவரும்-தமிழக முதல்வருமான கலைஞர் அவர்கட்கு மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தின் உள்ளும்புறமும் பல்லாயிரக்கணக்கானவர்கள் குழுமியிருந்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர் ; மீனம்பாக்கத்திலிருந்து கலைவாணர் அரங்கம்வரை சாலையின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்று வாழ்த்தொலிமுழங்கி வரவேற்றனர்.

கலைஞருடன் முரசொலி மாறனும், நிதித் துறைச் செயலாளர் வெங்கட்ரமணனும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வந்த விமானம், நேற்றிரவு 7-20 மணிக்கு மீனம்பாக்கத்தை வந்தடைந்தது.

விமானத்தைவிட்டுக் கலைஞர் இறங்கியதும், ஆளுநர் கே. கே. ஷா கட்டித் தழுவி வரவேற்றார்.

கழகப் பொதுச்செயலாளர் நாவலர், பொருளாளர் -- புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், புதுவை முதல்வர் எம். ஓ. எச். பாருக், சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், அமைச்சர்கள், மேயர், துணை மேயர், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், தந்தை பெரியார், மற்றும் கழக முன்னணித் தோழர்கள், பிற கட்சித் தலைவர்கள், அதிகாரிகள், கலைத்துறைப் பிரமுகர்கள், நகரப் பெருமக்கள் உட்பட ஏராளமானோர் விமான நிலையத்திற்கு வந்திருந்து வரவேற்றனர்.

அனைவரது வரவேற்புக்கும் நன்றி தெரிவித்து முதல்வர் கலைஞர் சிறிதுநேரம் பேசினார்.

விமான நிலையத்திலிருந்து கலைஞர் திறந்த காரில் ஊர்வலமாகவந்தார்.

சைதைத் தொகுதியின் சார்பில் மர்மலாங் பாலத்திற்கு அருகில் முதல்வருக்கு நல்வரவேற்பு அளிக்கப்பட்டது ; நான்கு யானைகள் கலைஞரை வரவேற்றன.

அடுத்து, முனியப்ப பிள்ளை சத்திரத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தேனாம்பேட்டை போலீசு நிலையம் அருகே கழகத் தோழர்கள் கூடியிருந்து, பாண்டு வாத்தியங்கள் முழங்க கலைஞருக்கு வரவேற்பளித்தனர்.

அண்ணா சிலைக்கு மாலை

முதலமைச்சர் அவர்கள் அண்ணாசாலை வழியாக ஊர்வலமாக வந்தார் ; அண்ணாசாலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

அதன்பின், கலைவாணர் அரங்குக்குச் சென்றார்.

ஜெய்சால்மர் பகுதியில்

பாகிஸ்தான் படை ஊடுருவல்

இந்திய விமானங்கள் விரட்டியடித்தன

ஜெய்ப்பூர், டிச. 6—

இராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் பகுதியில் பாகிஸ்தான் படை இந்தியாவுக்குள் 25 மைல் தூரம் முன்னேறி வந்தது ; உடனே இந்திய விமானப் படை புறப்பட்டுச் சென்று குண்டு வீசி பாகிஸ்தான் படையினரை எல்லைக்கு அப்பால் துரத்தியடித்தது ; இந்தச் சண்டையில் பாகிஸ்தானின் 37 டாங்கிகள் நொறுக்கப்பட்டன.

இதேபோல் லாங்கன்வால் என்ற இடத்தில் பாகிஸ்தான் டாங்கிப் படை இந்தியாவுக்குள் ஊடுருவியது ; இந்திய விமானங்களும் -- இராணுவ வீரர்களும் சேர்ந்து கடுமையாகப் போரிட்டு பாகிஸ்தானியரை விரட்டியடித்தார்கள்.

ஐ.நா.-வில் பாரபட்சமான அமெரிக்கத் தீர்மானம்

ஐ நா. டிச 6—

இந்தியாவும்--பாகிஸ்தானும் போர் நிறுத்தம் செய்து தங்கள் படைகளைத் திரும்பப்பெறக் கோரும் அமெரிக்கத் தீர்மானத்தை ஐ நா. பாதுகாப்புச் சபையில், தன் வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி இரஷ்யா ரத்து செய்தது.

தீர்மானத்தை ஆதரித்து 11 உறுப்பினர்கள் வாக்களித்தனர்; சீனாவும் ஆதரித்தது; பிரிட்டனும்--பிரான்சும் நடுநிலை வகித்தன, இரஷ்யாவும் போலந்தும் எதிர்த்து வாக்களித்தன.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதிகரித்து வருவதைச் சமாளிக்க முடியாமலேயே பாகிஸ்தான் அரசு இந்தியாமீது பழி போட்டு, அதனுடன் உறவு நிலை மோசமாகும்படியான முயற்சியில் இறங்கியிருக்கிறது" என்று கூறி 'இந்நிலைமைக்குப் பாகிஸ்தானே முழுப் பொறுப்பாளி' என்று இரஷ்யா கூறியிருக்கிறது.

ஓர் அரசியல் தீர்வுக்கு இரஷ்யா தொடர்ந்து செய்துவந்துள்ள முயற்சிகளைக் குறிப்பிட்டு, 'அந்த வகையில் பாகிஸ்தான் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளாததன்பேரில், எக்காரணத்தை முன்னிட்டும்பாகிஸ்தான் இந்தியாமீது ஆயுதத் தாக்குதல் நடத்தினால், அதை சோவியத் யூனியன் மிக வன்மையாகக் கண்டிக்கும்' என்று சோவியத் தலைவர்கள் யாகியா கானை எச்சரித்ததாக அறிக்கை தெரிவித்தது.

இந்தியாவுடன் உள்ள ஒப்பந்த உறவுகளை சோவியத் அறிக்கை குறிப்பிடவில்லையாயினும், அந்த அம்சத்தையும், அத்துடன் நேரடியான சோவியத் பாதுகாப்புப் பிரச்னையையும் அறிக்கை வலியுறுத்துவதாக இராசதந்திர வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இந்தியா வரவேற்பு

"இந்தியத் தீபகற்பத்தில் கை வைக்காதீர்" என்று வல்லரசுகளுக்கு இரஷ்யா சொல்லியிருப்பதை இந்தியா வரவேற்பதாக வெளிவிவகாரத் துறைச் செயலாளர் கவுல் கூறினார்.

"இந்திய அரசைப் பொறுத்தவரையில், இந்துமாக் கடலையே வல்லரசுச் சண்டைக்கும்— போட்டா போட்டிக்கும் இடமில்லாமல் விடுவதை விரும்பும்" என்று அவர் சொன்னார்.

ஐ. நா. அவையில் அமெரிக்கா மேற்கொண்ட நிலை குறித்து அவர் வியப்பும் அதிர்ச்சியும் தெரிவித்தார் ; 'இந்திய அரசு மீது எவ்வித அச்சுறுத்தலும், நிர்ப்பந்தமும் பலிக்காது' என்றார்.

"அமெரிக்கா, குதிரைக்கு முன் வண்டியை வைத்துப் பூட்டுவது போல், சண்டையின் மூலகாரணத்தைப் புறக்கணித்து -- போர் நிறுத்தத்தையும், படையைத் திரும்ப அழைப்பதையும் கோருகிறது" என்று திரு. கவுல் மேலும் கூறினார்.

பிரிட்டன் இந்தியாவின் நிலையை

"சபை ஒருமனதான முடிவு செய்வது அவசியம்" என பிரிட்டிஷ் பிரதிநிதி சர். கோலின் குரோ வலியுறுத்தினார் ; 'துணைக் கண்டத்தில் உயிர்ச் சேதத்தை நிறுத்துவது முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்' என்றார்.

இரஷ்யா 'வீட்டோ' செய்த பிறகு சமரசம்காண கால தவணை பெற ஒத்திவைப்பைப் பிரிட்டன் கோரியது; அதை, பிரான்சும் -- இத்தாலியும் ஆதரித்தன.

'எவ்வளவு நேர ஒத்திவைப்பு தேவை' என அமெரிக்க அதிகாரி புஷ் கேட்டார்.

'24 மணி நேர ஒத்திவைப்பு தேவை' என இத்தாலியப் பிரதிநிதி வின்ஸி கூறினார்.

பிறகு 12 மணிநேரம் ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டது.

"தீர்மானம் ஒருதலைபட்சமானது; ஏற்கத் தக்கது அல்ல" என்று இரஷ்ய உதவி அயல்நாட்டு அமைச்சர் மாலிக் எச்சரித்தார்.

இரஷ்யாவின் 'வீட்டோ'வால் நிறுத்திவைக்கப்பட்ட ஐ. நா. பாதுகாப்புச் சபை முந்திய நேரப்படி ஞாயிறு இரவு ஒரு மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

ஆக்ரா மீது

6 தடவை தாக்குதல்

ஆக்ரா, டிச. 6—

ஆக்ரா மீதும் -- அதன் விமானத் தளத்தின மீதும் நேற்று அதிகாலை 1.30 மணியிலிருந்து 6 மணி வரையில் 6 தாக்குதலகளைப் பாகிஸ்தான் விமானங்கள் நடத்தின.

முதலில் நடைபெற்ற தாக்குதல் கடுமையாக இருந்ததாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

எதிர்க்காமலும், கவுன்சிலின் வோட்டெடுப்பில் கலந்துகொள்ளாமலுமிருந்ததற்குமகிழ்ச்சிதெரிவித்து, 'அது இன்னும் உதவக்கூடிய போக்கைக் கைக்கொண்டிருக்கலாம்' என்று நம்பிகைத் தெரிவித்தார்.

"சீனாவின் போக்குக் குறித்து இந்தியா அதிர்ச்சியோ வியப்போ அடையவில்லை" என்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.